සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2015 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2015 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2015

නාට්‍ය හා රංග කලාව I
நாடகமும் அரங்கியலும் I
Drama and Theatre I

58 T I

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

சுட்டெண் : ..............................

| பகுதி I மொத்தப் புள்ளிகள் | |
|---|---|

அறிவுறுத்தல்கள் :

* பகுதி I இலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர், பகுதி II இன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.
* பகுதி II இல் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

* **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.
* இப்பகுதியில் **1** தொடக்கம் **40** வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**1.** நாடகம் என்பது 'வாழ்க்கையின் ஒரு துண்டம்' எனக் கூறியவர்,
(1) அரிஸ்டோட்டல் (2) பேனாட்ஷா (3) பரதமுனி
(4) அலடைஸ் நிக்கோல் (5) அபிநவகுப்தர் (......)

**2.** சமஸ்கிருத நாடகமரபில் குறிப்பிடப்படும் அர்த்த பிரகிருதிகளில் 'பலனை அடைய பயன்படும் அர்த்த பிரகிருதி' குறிப்பது,
(1) 'பதாக' என்பதனையாகும். (2) 'பிந்து' என்பதனையாகும்.
(3) 'பிஜ' என்பதனையாகும். (4) 'காரிய' என்பதனையாகும்.
(5) 'பிரகரி' என்பதனையாகும். (......)

**3.** சமஸ்கிருத நாடகமரபில் கதாநாயகனின் எதிர்பார்ப்புகள் நிறைவேறுமா ? இல்லையா ? எனும் ஆவல் மேலிடுகின்ற அந்தரநிலை,
(1) 'ஆரம்ப' எனப்படும். (2) 'யத்ன' எனப்படும். (3) 'பிராப்தியாய' எனப்படும்.
(4) 'நியதாப்தி' எனப்படும். (5) 'பலாகம' எனப்படும். (......)

**4.** பின்வருவனவற்றுள் நாடக பாடம் (Dramatic Text) பற்றிய சரியான கூற்று **அல்லாதது,**
(1) யாதேனும் ஒரு சம்பவத்தை அடிப்படையாக வைத்து நாடக பாடத்தை உருவாக்கலாம்.
(2) நாடகவாக்கம், விமர்சனம் ஆகியவற்றிற்கு அடிப்படையாக அமைவது நாடக பாடமாகும்.
(3) நாடகக் கலையின் சிறப்பம்சங்களில் நாடக பாடமும் ஒன்றாகும்.
(4) நாடக பாடத்தில் மேடைக் குறிப்புகள் அடங்கியிருக்கும்.
(5) நாடக பாடத்தை ஆற்றுகைப் பாடம் எனவும் குறிப்பிடுவர். (......)

**5.** பரதர் கூறும் சாத்விக அபிநயத்தின் எட்டு வித பாவங்களுள் 'ஸ்தம்ப' எனும் சொல் குறிப்பது,
(1) நிறம் மாறுதலையாகும். (2) குரல் மாறுதலையாகும்.
(3) நிலைக்குற்றி நிற்றலையாகும். (4) கண்ணீர் வடிதலையாகும்.
(5) மயங்கி வீழ்தலையாகும். (......)

**6.** பின்வருவனவற்றுள் ஒப்பேரா பற்றிய மிகச் சரியான கூற்று,
(1) கி.பி. 1 600 இல் இத்தாலியில் தோன்றியது.
(2) 19ஆம் நூற்றாண்டில் இத்தாலியிலும் பிரான்சிலும் தோன்றியது.
(3) நடனப்பாணியை ஊடகமாகக் கொண்டு இசையைப் பயன்படுத்தி ஆற்றுகை செய்வது.
(4) 18ஆம் நூற்றாண்டு உலகெங்கும் வியாபித்த தொல்சீர் வடிவங்களிலொன்று.
(5) கீழைத்தேய நடனநாடகங்களை அடிப்படையாகக் கொண்டது. (......)

[பக். 2 ஐப் பார்க்க

**7.** பின்வருவனவற்றுள் சிங்கள 'கொஹொம்பகங்கரிய' சடங்கு நிகழ்த்தப்படுவதன் நோக்கங்களுள் ஒன்று **அல்லாதது,**
(1) தனிப்பட்ட வகையில் குடும்பக் கஷ்டங்களை நீக்குவதற்காகச் செய்யப்படுவது.
(2) ஊருக்கு நன்மை கிடைப்பதற்காகச் செய்யப்படுவது.
(3) கடந்த காலத்தில் நல்ல விளைச்சலைத் தந்தமைக்காகச் செய்யப்படுவது.
(4) சிறந்த மகப்பேறு கிடைப்பதற்காகச் செய்யப்படுவது.
(5) பிறக்க இருக்கும் வருடம் வளமும் சௌபாக்கியமும் மிக்கதாக அமைய வேண்டும் என்பதற்காகச் செய்யப்படுவது. (......)

**8.** ஏழு மலட்டு ராணிகளை பிரதான பாத்திரமாகக் கொண்ட சிங்களச் சடங்கு,
(1) சன்னியக்கும (2) ரட்டயக்கும (3) கோலம
(4) தொவில் (5) பகன்மடுவ (......)

**9.** இலங்கையில் மலையகக் காமன்கூத்து இடம்பெறும் அரங்கவெளி,
(1) பூங்குடிசை ஆகும். (2) பொட்டல்வெளி ஆகும்.
(3) களத்துமேடு ஆகும். (4) வட்டக்களரி ஆகும்.
(5) தானயம்பல ஆகும். (......)

**10.** பெரும்பாலும் வைகாசி மாதத்தில் இடம்பெறும் நிகழ்வு,
(1) மானம்பூத் திருவிழா (2) கந்தசஷ்டிச் சூரன் போர்
(3) பஞ்சபாண்டவர் வனவாசச் சடங்கு (4) காமன்கூத்து
(5) கண்ணகி அம்மன் குளுத்திச் சடங்கு (......)

**11.** மானம்பூச் சடங்கில் இடம்பெறும் பிரதான பாத்திரங்கள்
(1) சூரபத்மன், முருகன் என்பனவாகும். (2) பஞ்சபாண்டவர், திரௌபதை அம்மன் என்பனவாகும்.
(3) கஜமுகாசுரன், பிள்ளையார் என்பனவாகும். (4) மகிடாசூரன், மகிசவர்த்தனி அம்மன் என்பனவாகும்.
(5) கம்சன், கண்ணன் என்பனவாகும். (......)

**12.** 'சிங்கள நாட்டார் நாடகம்' (The Sinhalese Folkplay) எனும் நூலின் ஆசிரியர்,
(1) நியூமான் ஜுபால் ஆவார். (2) இ. எவ். சீ. லுடோவைக் ஆவார்.
(3) ஜோன் டி சில்வா ஆவார். (4) எதிரிவீர சரத்சந்திர ஆவார்.
(5) சார்ள்ஸ் டயஸ் ஆவார். (......)

**13.** இலங்கையில் தயாரிக்கப்பட்ட பழைமையான 'நாடகம்'
(1) ஹரிஸ்சந்திர ஆகும். (2) அஹலேபொல ஆகும்.
(3) சிங்கபாகு ஆகும். (4) பத்மாவதி ஆகும்.
(5) ஸ்ரீ விக்கிரமராஜசிங்க ஆகும். (......)

**14.** பின்வருவனவற்றுள் பாஸ்கு நாடக மரபின் தோற்றுவாயாக அமையக்கூடியது,
(1) மறைபொருள் நாடகங்கள் (2) புனிதரின் நாடகங்கள்
(3) ஒழுக்கப்பண்பு நாடகங்கள் (4) வீர நாடகங்கள்
(5) ஒழுக்கப்பண்பு இடைநிகழ்வு நாடகங்கள் (......)

**15.** பின்வருவனவற்றுள் சிங்கள நாடகாசிரியர் திஸ்ஸ காரியவசம் அவர்களால் எழுதப்பட்ட நூல்,
(1) சிங்கள நாடக வரலாறு (2) சிங்கள நாட்டார் நாடகம்
(3) சிங்கள நாடக வளர்ச்சி (4) சிங்கள நாடகத்தின் கதை
(5) சிங்களப் பாரம்பரிய அரங்கு (......)

**16.** பின்வரும் கூற்றுகளில் கொட்டகை மற்றும் மினர்வா நாடகங்கள் பற்றிய **தவறான** கூற்று,
(1) தற்காலிக இரசனை சார்ந்த மருட்கைக் கதைப்பின்னல் காணப்படும்.
(2) யதார்த்தபூர்வமான நடத்தைகளிற்கு அப்பாற் சென்று கறுப்பு, வெள்ளைப் பாத்திரங்கள் பயன்படுத்தப்படும்.
(3) நாட்டுப்பற்று, சுதேச உணர்வு பற்றிய சமூகக் கதைகள் காணப்படும்.
(4) மத்தியதர சமூகத்தையும் வாழ்க்கைக் கோலத்தையும் பிரதிபலிக்கும்.
(5) நடிப்பை விட இசைநாடகத்தின் தன்மை மேலோங்கி நிற்கும். (......)

**17.** இயற்பண்புவாத நாடக மோடியின் முன்னோடியான எமிலிசோலா,
(1) ஜேர்மனியைச் சேர்ந்தவர். (2) பிரான்சைச் சேர்ந்தவர். (3) சுவீடனைச் சேர்ந்தவர்.
(4) ரஷ்யாவைச் சேர்ந்தவர். (5) போலந்தைச் சேர்ந்தவர். (......)

[பக். 3 ஐப் பார்க்க

**18.** இயற்பண்புவாத நாடகமரபு 1900 ஆம் ஆண்டுகளில் செயலிழந்து போனமைக்கான காரணம்
(1) நடிகன் மேடையில் நடிக்காது வாழ வேண்டும் என்ற கொள்கை காணப்படாமையாகும்.
(2) உள்ளது உள்ளவாறு மீள் படைப்புச் செய்யப்பட வேண்டுமென்ற கொள்கையை நிறைவேற்ற முடியாது போனமையாலாகும்.
(3) தாழ்த்தப்பட்ட மக்களின் நிலைமையை நாடகங்களில் காட்ட முற்பட்டமையாகும்.
(4) மனிதனுக்கு ஏற்படும் அனர்த்தங்கள் பற்றி பேசப்பட்டமையாலாகும்.
(5) இயற்கையாக அமைந்த பொருட்களைப் பயன்படுத்தியமையாலாகும். (......)

**19.** பின்வருவனவற்றுள் மனோரதிய (Romantic) நாடகமரபின் பண்பு **அல்லாதது,**
(1) அழகு, காதல், இலட்சியமான விடயங்கள் பற்றிக் கூறுவது.
(2) 18ஆம் நூற்றாண்டில் ஜேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் தோன்றிய எண்ணக்கரு.
(3) காரண-காரியத் தொடர்புக்கு முதலிடம் வழங்கப்படாத ஒரு பாணி.
(4) சிந்திக்கத் தூண்டுவதற்கான போதனைகளை வழங்குவது.
(5) அறிவாற்றலிலும் பார்க்க உணர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுப்பது. (......)

**20.** யதார்த்த நாடகமரபின் முன்னோடி எனக் கருதப்படும் இப்சனின் நாடகங்களில் ஒன்று,
(1) சமூகத்தின் தூண்கள் (2) கடல்வாத்து (3) அன்னத்தடாகம்
(4) சம்பந்தம் (5) செரிப் பழத்தோட்டம் (......)

**21.** யதார்த்த நாடகங்கள் வீழ்ச்சியடைந்தமைக்கான காரணம்,
(1) பார்ப்போரைச் சிந்திக்கத் தூண்டும் செயற்பாடுகளில் ஈடுபட்டமையாகும்.
(2) பார்ப்போரை நான்காவது சுவராகக் கொண்டு அரங்க மருட்கைக்குள் இறுக வைத்தமையாகும்.
(3) பார்ப்போர் பிரச்சினைகளுக்கான முடிவுகளைத் தாமே தீர்மானிக்க வைத்தமையாகும்.
(4) பார்ப்போரை ஒரு விதமான படிமக் குறியீட்டுத் தன்மையுடனும் பலவித அர்த்தங்களுடனும் சிந்திக்கத் தூண்டியமையாகும்.
(5) சம்பவங்களை மீளப் பிரதிபலிக்காது செய்துகாட்டியமை அல்லது நிகழ்த்திக்காட்டியமையாகும். (......)

**22.** வானொலி நாடகத்தின் பிரதான பண்பு,
(1) வாசிப்பின் மூலம் நுகரப்படும்.
(2) அளிக்கை ஊடகமாக கமரா பயன்படும்.
(3) பார்ப்போர் கணப்பிரசன்னமாக இருந்து நேரடித் துலங்கலை வெளிப்படுத்துவர்.
(4) முழுக்க முழுக்க கேட்டல் மூலம் உணரப்படும்.
(5) அரங்கவெளியொன்றில் நிகழ்த்துகையை வேண்டி நிற்கும். (......)

More Past Papers at
tamilguru.lk

**23.** பின்வருவனவற்றுள் தென்மோடிக் கூத்துப் பற்றிய சரியான கூற்று,
(1) விறுவிறுப்பான, கடினம் குறைந்த ஆடல் கொண்டது.
(2) கடினமும் விறுவிறுப்பும் நுணுக்கமும் கொண்ட ஆடல்கள் இடம்பெறும்.
(3) பாடல்கள் மெல்லோசையுடையனவாகக் காணப்படும்.
(4) தோடயப் பகுதிகளில் கதைச் சுருக்கம் சொல்லப்படும்.
(5) பாத்திரங்களிற்கான ஆடற் தருக்கள் காணப்படமாட்டாது. (......)

**24.** பின்வருவனவற்றுள் தென்மோடிக் கூத்து,
(1) இராம நாடகம் (2) கர்ணன் போர் (3) அனுருத்திர நாடகம்
(4) தர்மபுத்திர நாடகம் (5) 18ஆம் நாட் போர் (......)

**25.** 'சைக்குளோராமா' என்பதன் மறுபெயர்
(1) முன்திரை (2) வான்திரை (3) பக்கத்திரை
(4) குறுக்குத்திரை (5) மேலிழுக்கும் திரை (......)

**26.** பின்வருவனவற்றுள் வாசாப்பு பற்றிய சரியான கூற்று,
(1) புனிதர்களின் கதையே உள்ளடக்கமாகக் கொள்ளப்படும்.
(2) பெண்களும் களரியுள் அனுமதிக்கப்படுவர்.
(3) புலசந்தோர் அரசனின் வருகையை உரைப்பர்.
(4) கட்டியக்காரன் வாசாப்புவை அறிமுகம் செய்வான்.
(5) பெரும்பாலும் பகற் காலங்களில் நடைபெறும். (......)

**27.** மட்டக்களப்பில் சித்திரை மாதத்தில் வேளாண்மையுடன் தொடர்புபட்டதாக ஆடப்படும் ஆற்றுகை வடிவம்,
(1) பறைமேளக்கூத்து (2) மகிடிக்கூத்து (3) வசந்தன் கூத்து
(4) குடமுழுக்குக்கூத்து (5) புலிக்கூத்து (......)

**28.** பின்வரும் பாத்திரங்களில் காத்தவராயன் கூத்துடன் சம்பந்தப்படாத அம்மன் பாத்திரம்,
(1) முத்துமாரி அம்மன் (2) பார்வதி அம்மன் (3) கண்ணகி அம்மன்
(4) பூமாதேவி அம்மன் (5) வல்லத்து மாகாளி அம்மன் (......)

[பக். 4 ஐப் பார்க்க

இங்கே வெட்டி அகற்றவும்

**29.** மலையக பொன்னர் சங்கர் நாடகத்தில் கதையை நகர்த்திச் செல்லும் பாத்திரம்,
(1) தாமரை பெரியநாச்சி (2) பொன்னர் (3) குதிரைச் சேவகன்
(4) மந்திரமாமுனி (5) பெரியசாமி (……)

**30.** ஈழத்தில் கலையரசு சொர்ணலிங்கம் ஸ்தாபித்த நாடக சபையின் பெயர்
(1) போய்ஸ் கொம்பனி (2) லங்கா சுபோத விலாச சபை
(3) சுகுண விலாச சபை (4) சரஸ்வதி விலாச சபை
(5) சுகிர்த விலாச சபை (……)

**31.** பேராசிரியர் கணபதிப்பிள்ளையால் எழுதப்பெற்ற அரசியல் விமர்சன நாடகங்கள் இரண்டு,
(1) உடையார் மிடுக்கு, கண்ணன் கூத்து (2) முருகன் திருகுதாளம், நாட்டவன் நகர வாழ்க்கை
(3) பொருளோ பொருள், சுந்தரம் எங்கே ? (4) சங்கிலி, மாணிக்கமாலை
(5) தவறான எண்ணம், துரோகிகள் (……)

**32.** இந்தியாவில் மணிப்புரி பிரதேசத்தில் ஆடப்படும் அரங்க வடிவம்,
(1) பாகவத மேளா (2) யாத்ரா (3) மணிப்புரி (4) கதக் (5) கதகளி (……)

**33.** கிரேக்க 'மிமெசிஸ்' என்பது,
(1) அவலத்தவறு (2) பெருவீழ்ச்சி (3) உணர்ச்சி வெளிப்பாடு
(4) போலச் செய்தல் (5) பின்நோக்குக் காட்சி (……)

**34.** வாயு விளக்குகள் (Gas lights) முதன்முதலில் பயன்படுத்தப்பட்ட அரங்கு,
(1) கிரேக்ககால அரங்கு (2) ரோமர்கால அரங்கு
(3) மத்தியகால அரங்கு (4) மறுமலர்ச்சிக்கால அரங்கு
(5) இங்கிலாந்துகால (எலிசபெத்) அரங்கு (……)

**35.** சீன நாடக வரலாற்றில் பிரசித்தி பெற்ற 'சிவப்பு விளக்கு' என்ற நாடகம்,
(1) புராதன சீன மரபிற்குரியது.
(2) சீன வணக்கத்திற்குரியது.
(3) சீன சடங்கு முறையைக் குறிப்பது.
(4) சீனப் பாடல் அரங்கைக் குறிப்பது.
(5) சீனப் புரட்சியை அடிப்படையாகக் கொண்டெழுந்தது. (……)

**36.** சங்ககால பாணரின் பிரதான வாத்தியம்,
(1) சங்கு (2) முழவு (3) முரசு (4) யாழ் (5) தடாரி (……)

**37.** சிலப்பதிகாரத்தில் வரும் கானல்வரி என்பது,
(1) பொதுவான பாடல் வகையைச் சார்ந்ததாகும்.
(2) ஆடல் வகையைச் சார்ந்ததாகும்.
(3) வரிக்கூத்தைக் குறிப்பதாகும்.
(4) இருவர் பாடுவதைக் குறிப்பதாகும்.
(5) பலர் சேர்ந்து ஆடுவதைக் குறிப்பதாகும். (……)

● **38** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்களுக்குக் கீழே தரப்பட்டுள்ள படங்களை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


அ


ஆ


இ


ஈ


உ

**38.** படத்தில் காட்டப்பட்டுள்ள அரங்கவியலாளர்களில் கற்பிதவாத நாடகங்களை எழுதியவரைக் குறிக்கும் எழுத்து
(1) அ (2) ஆ (3) இ (4) ஈ (5) உ (……)

**39.** படத்தில் காட்டப்பட்டுள்ளவர்களில் 'ஒரு பாவையின் வீடு' என்ற நாடகத்தை எழுதியவரைக் குறிக்கும் எழுத்து
(1) அ (2) ஆ (3) இ (4) ஈ (5) உ (……)

**40.** படத்தில் காட்டப்பட்டுள்ளோரில் நாடகங்களைப் பிரெஞ்சு மொழியில் எழுதிய ஐரிஸ் தேசத்தைச் சேர்ந்தவரைக் குறிக்கும் எழுத்து
(1) அ (2) ஆ (3) இ (4) ஈ (5) உ (……)

* *

[பக். 5 ஐப் பார்க்க

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුවේ හිමිකම ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2015 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2015 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2015

නාට්‍ය හා රංග කලාව I
நாடகமும் அரங்கியலும் I
Drama and Theatre I

58 T I

4349

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

※ பிரிவு **A** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பிரிவு **B** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

### பிரிவு A

**1.** சடங்கிலிருந்து நாடகம் தோன்றியதென்பர்.

(i) இக்கூற்றின் பொருத்தப்பாட்டை உதாரணங்களுடன் விளக்குக. (04 புள்ளிகள்)

(ii) சடங்கிற்கும் நாடகத்திற்குமிடையே காணப்படும் ஒருமைப்பாடுகளை விளக்குக. (05 புள்ளிகள்)

(iii) பின்வரும் சடங்குகளைச் சுருக்கமாக விளக்கி, அவற்றிற் காணப்படும் அரங்கியற் பண்புகளையும் விளக்குக.

(அ) சூரன் போர்
(ஆ) பஞ்சபாண்டவர் வனவாசம்
(இ) பாஸ்கா (06 புள்ளிகள்)

**2.** (i) "பேட்டோல்ற் பிறெ.'.டின் காவியபாணி, நடிப்பு மோடி என்பன பற்றி விளக்குகையில் அவரது தூரப்படுத்தல் அல்லது அந்நியமாதல் நடிப்பு முக்கியமாகிறது." விளக்குக. (07 புள்ளிகள்)

(ii) 20ஆம் நூற்றாண்டின் பின் அரங்கச் செயன்முறைகளில் ஏற்பட்ட மாற்றங்களில் அகஸ்தா போல் முக்கியமானவராவார். அவர் கையாண்ட அரங்கச் செயன்முறைகள் பற்றி விளக்குக. (08 புள்ளிகள்)

**3.** ஆற்றுவோர் தமக்கும் பார்ப்போருக்கும் வசதியான ஓர் அரங்க வெளியிலே ஆற்றுகை செய்கின்றனர். பின்வரும் அரங்க வெளிகளின் இயல்புகளை அமைப்பு நிலையிலும் ஆற்றுகை நிலையிலும் விளக்குக.

(i) சிலப்பதிகார மாதவியின் பதினொரு ஆடல்கள் இடம்பெற்ற அரங்கு (05 புள்ளிகள்)

(ii) எலிசபெத்கால அரங்கு (05 புள்ளிகள்)

(iii) புரோசீனியம் வில்வளைவு அரங்கு (Pro-Scenium Arch Theatre) (05 புள்ளிகள்)

### பிரிவு B

**4.** (i) கிரேக்க நாடக வகைகளில் ஒன்றான மகிழ்நெறி (comedy) நாடகத்தின் தோற்றம், வளர்ச்சி என்பன பற்றி விளக்குக. (07 புள்ளிகள்)

(ii) பின்வருவோர் மகிழ்நெறி நாடகத்திற்கு ஆற்றிய பங்களிப்பை விவரிக்குக.

(அ) அரிஸ்ரோபேன்ஸ்
(ஆ) மெனாண்டர் (08 புள்ளிகள்)

**5.** (i) யப்பானிய அரங்க வகைகள் **ஐந்தைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) அவற்றுள் **இரண்டு** பற்றி விளக்கக் குறிப்புகள் தருக. (06 புள்ளிகள்)

(iii) சமஸ்கிருத நாடகமரபில் பின்வருவோர் ஆற்றிய பணிகள் பற்றி விளக்குக.

(அ) காளிதாசர்
(ஆ) பாசர் (06 புள்ளிகள்)

**6.** பின்வருவனவற்றுள் எவையேனும் **மூன்றிற்குச்** சிறுகுறிப்பு எழுதுக.

(i) தமிழக தெருக்கூத்து
(ii) சிங்கள ரட்டயக்கும
(iii) பறைமேளக் கூத்து
(iv) வறுமை அரங்கு
(v) அண்ணாத்துரையின் நாடகங்கள் (03 × 05 = 15 புள்ளிகள்)

※ ※ ※

AL/2015/58/T-II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2015 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2015 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2015

| | | | |
|---|---|---|---|
| නාට්‍ය හා රංග කලාව II<br>நாடகமும் அரங்கியலும் II<br>Drama and Theatre II | 58 T II | | පැය තුනයි<br>மூன்று மணித்தியாலம்<br>*Three hours* |

சுட்டெண் : ................................

| | |
|---|---|
| பகுதி I<br>மொத்தப் புள்ளிகள் | |

**அறிவுறுத்தல்கள் :**

※ பகுதி **I** இலுள்ள **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதிய பின்னர், பகுதி **II** இன் விடைத்தாள்களுடன் இணைத்துக் கையளிக்குக.

※ பகுதி **II** இல் **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

※ **எல்லா** வினாக்களுக்கும் **இவ்வினாத்தாளிலேயே** விடை எழுதுக.

※ **1** தொடக்கம் **40** வரையான வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து, அதன் **இலக்கத்தை அடைப்புக்குறியினுள்** எழுதுக.

**1.** 'அன்ரிகனி' நாடகத்தில் வரும் தைரீசியஸ் ஒரு
(1) காவலாளி பாத்திரமாகும். (2) செய்தியாளன் பாத்திரமாகும். (3) தீர்க்கதரிசி பாத்திரமாகும்.
(4) தூதுவன் பாத்திரமாகும். (5) ஒற்றன் பாத்திரமாகும். (……)

**2.** 'அன்ரிகனி' நாடகத்தின் பிரதான கரு
(1) சந்தேக புத்தி
(2) அதிகாரப் போராட்டம்
(3) ஆணாதிக்க சிந்தனை
(4) அரச நீதிக்கும் தெய்வ நீதிக்குமிடையேயான போராட்டம்
(5) தந்தையைக் கொன்று தாயை மணம்முடித்தல் (……)

More Past Papers at
tamilguru.lk

**3.** வில்லியம் சேக்ஸ்பியரின் 'யூலியசீசர்' நாடகம் அவரால்
(1) 1 558 இல் எழுதப்பட்டது. (2) 1 580 இல் எழுதப்பட்டது. (3) 1 601 இல் எழுதப்பட்டது.
(4) 1 603 இல் எழுதப்பட்டது. (5) 1 604 இல் எழுதப்பட்டது. (……)

**4.** 'ஒத்தெல்லோ' நாடகத்தில் **காணப்படாத** அம்சங்கள்
(1) காதல், நம்பிக்கை (2) உன்னத காமம், துரோகம் (3) பொறாமை, தூய அன்பு
(4) வருவதுரைத்தல், ஊழ்வினை (5) சந்தேகம், சதித்திட்டம் (……)

**5.** பின்வருவனவற்றுள் 'ஒரு பாவையின் வீடு' நாடகத்தில் வரும் ரோவால்ட் கெல்மரின் பாத்திரப்பண்பு எனக் **கூறமுடியாதது,**
(1) பாரம்பரியத்திற்கு அடிமைப்பட்டவன்.
(2) பரந்த மனப்பாங்கானவன்.
(3) புரிந்துணர்வு இல்லாதவன்.
(4) ஆணாதிக்க சிந்தனையுடையவன்.
(5) பாம்பரியமான சமூக, பண்பாடு, பொருளாதார அமைப்பில் மூழ்கிப் போனவன். (……)

**6.** காளிதாசரின் 'சாகுந்தலம்' நாடகத்தின் மூலக்கதை பெறப்பட்டது,
(1) கந்தபுராணத்தில் இருந்தாகும். (2) சிவபுராணத்தில் இருந்தாகும்.
(3) இராமாயணத்தில் இருந்தாகும். (4) மகாபுராணத்தில் இருந்தாகும்.
(5) மகாபாரதத்தில் இருந்தாகும். (……)

**7.** 'அலங்காரரூபன்' நாடகத்தினூடாகக் கூறப்படும் கருத்து **அல்லாதது**
(1) மனிதத்துவத்தை மதிப்பதற்கான மனப்பக்குவம் வேண்டும்.
(2) ஆராயாது செய்யும் போர் அழிவைத்தரும்.
(3) தெய்வத்தால் நிச்சயம்பெற்ற திருமணம் நிறைவேறும்.
(4) இறை நம்பிக்கையும் பக்தியும் மனிதனுக்கு அவசியமானது.
(5) துன்பத்திலிருந்து மீள மீண்டும் மீண்டும் துன்பம் வரும். (……)

[பக். 2 ஐப் பார்க்க

8. திருக்குற்றாலக் குறவஞ்சியில் வரும் 'குறம்' என்பது,
(1) குற்றாலநாதரை வசந்தவல்லி காதல் கொள்வதைக் குறிக்கும்.
(2) சிங்கன் சிங்கி மேல் காதல் கொள்வதைக் குறிக்கும்.
(3) பரமாத்மா ஜீவாத்மாவுடன் சங்கமிப்பதைக் குறிக்கும்.
(4) குறத்தியைக் கண்டு குறவன் வியந்து பேசும் இறுதிப் பகுதியைக் குறிக்கும்.
(5) குறத்தி குறி சொல்லும் பகுதியின் மையப் பகுதியைக் குறிக்கும். (......)

9. மகாகவி காளிதாசரின் 'அபிக்ஞான சாகுந்தலம்' நாடகத்தை தமிழில் மொழிபெயர்த்தவர் **அல்லாதவர்**
(1) சுத்தானந்த பாரதி (2) மறைமலை அடிகள் (3) சோ. நடராசன்
(4) இ. முருகையன் (5) சந்தானம் (......)

10. மயில், தப்பிவந்த தாடி ஆடு, ஓட்டு வீடு ஆகிய சிறுவர் நாடகங்களை எழுதியோர் முறையே
(1) ம. சண்முகலிங்கம், சி. மௌனகுரு, சி. ஜெயசங்கர்
(2) வேலு சரவணன், முத்து இராதாகிருஸ்ணன், சி. ஜெயசங்கர்
(3) ஏ. ரி. பொன்னுத்துரை, சி. மௌனகுரு, முத்து இராதாகிருஸ்ணன்
(4) ஏ. ரி. பொன்னுத்துரை, ஸ்ரீ கணேசன், ம. சண்முகலிங்கம்
(5) கலைச்செல்வன், சி. மௌனகுரு, மாவை நித்தியானந்தன் (......)

11. மகாகவியின் 'கோடை', ம. சண்முகலிங்கத்தின் 'கூடிவிளையாடு பாப்பா' போன்ற நாடகங்களை முதலில் நெறியாள்கை செய்தவர்
(1) நா. சுந்தரலிங்கம் (2) அ. தாசீசியஸ் (3) இ. சிவானந்தன்
(4) சி. மௌனகுரு (5) சுஹைர் ஹமீத் (......)

12. தலைசிறந்த 'பா' நாடகாசிரியர் அம்பியின் சிறந்த நாடகங்களில் ஒன்று
(1) புதியதொரு வீடு (2) விடிவை நோக்கி (3) கடூழியம்
(4) முற்றிற்று (5) வேதாளம் சொன்ன கதை (......)

13. இ. சிவானந்தன் அவர்களால் எழுதப்பட்ட அரங்கியல் தொடர்பான நூல்
(1) வட இலங்கை நாட்டார் அரங்கு
(2) மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள்
(3) இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ் நாடக அரங்கம்
(4) பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் நாடகம்
(5) அரங்கக் கட்டுமானம் (......)

More Past Papers at
tamilguru.lk

14. பின்வருவனவற்றுள் இ. முருகையனால் எழுதப்பெற்ற தெருவெளி நாடகங்களில் ஒன்று
(1) மாயமான் (2) கசிப்பு
(3) திருவிழா (4) மானிடம் சுடரும் ஓர் விடுதலை
(5) களத்தில் காத்தான் (......)

15. உலக நாடக தினம் கொண்டாடப்படுவது
(1) ஜனவரி 14 ஆகும். (2) மார்ச் 08 ஆகும். (3) மார்ச் 27 ஆகும்.
(4) ஏப்ரல் 23 ஆகும். (5) ஏப்ரல் 28 ஆகும். (......)

16. இலங்கையில் 'மெய்ப்பாடு' எனும் அரங்கியல் இதழை வெளியிடும் நிறுவனம்
(1) அரங்க ஆய்வுகூடம் - மட்டக்களப்பு (2) திருமறைக் கலா மன்றம்
(3) அரங்க செயற்பாட்டுக் குழு (4) செயற்றிறன் அரங்க இயக்கம்
(5) யாழ் பல்கலைக்கழக வெறுவெளி அரங்கக்குழு (......)

17. வேத்தியல், பொதுவியல் என்பன பற்றி எடுத்துரைக்கும் நூல்
(1) தொல்காப்பியம் (2) கலித்தொகை (3) பரிபாடல்
(4) சிலப்பதிகாரம் (5) மணிமேகலை (......)

18. மகேந்திர பல்லவனால் எழுதப்பட்ட மத்த விலாச பிரகசனம் என்பது ஒரு,
(1) அவலச்சுவை நாடகமாகும். (2) அங்கதச்சுவை நாடகமாகும்.
(3) காதற்சுவை நாடகமாகும். (4) காமச்சுவை நாடகமாகும்.
(5) மகிழ்நெறிச்சுவை நாடகமாகும். (......)

19. தமிழ்நாட்டில் தெருக்கூத்து பெருவாரியாக ஆடப்படும் மாவட்டம்
(1) செங்கல்பட்டு (2) திருச்சி (3) மதுரை
(4) சேலம் (5) கோயம்புத்தூர் (......)

[பக். 3 ஐப் பார்க்க

**20.** தமிழ்நாட்டு நாடக வரலாற்றில் கும்பகோணத்தில் அழகிய இளம்பெண்களைக் கொண்டு நாடகம் நடத்தியவர்
(1) பாலாமணி அம்மையார் (2) சங்கரதாஸ் சுவாமிகள் (3) பாலசரஸ்வதி
(4) கே. குற்றாலம்பிள்ளை (5) கே. பி. சுந்தராம்பாள் (......)

**21.** கோபாலகிருஸ்ண பாரதியார் எழுதியது,
(1) இராம நாடகக் கீர்த்தனை ஆகும். (2) நந்தனார் சரித்திரக் கீர்த்தனை ஆகும்.
(3) பத்மாவதி சரித்திரம் ஆகும். (4) கோவலன் சரித்திரம் ஆகும்.
(5) பஞ்சபாண்டவர் சரித்திரம் ஆகும். (......)

**22.** பின்வருவனவற்றுள் பம்மல் சம்பந்த முதலியாரின் நாடகப் பணி **அல்லாதது**
(1) சுகுணவிலாச சபையை நிறுவி நாடகம் நிகழ்த்தியமை
(2) வசன முறையிலான நாடகங்களைப் படைத்து தமிழ் நாடக உலகில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தியமை
(3) 90 நாடகங்களுக்கு மேற்பட்ட நாடகங்களை எழுதி நெறிப்படுத்தி நடித்துள்ளமை
(4) பார்சி நாடகமரபை தமிழ்ப்படுத்தி, அதில் கர்நாடக இசையைப் பயன்படுத்தியமை
(5) தனது நிறுவனத்தில் பட்டதாரிகள், நீதிபதிகள், வழக்கறிஞர்கள், வைத்தியர்கள் என அனைவரையும் இணைத்துக் கொண்டமை (......)

**23.** இருபதாம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் தீனிப்போர், ஏகலைவன் போன்ற நாடகங்களை மேடையிட்ட நாடகக்குழு
(1) தன்னானே கலைக்குழு (2) கூத்துப்பட்டறை (3) பல்கலை அரங்கம்
(4) ஆழி நாடக இயக்கம் (5) நிஜ நாடக இயக்கம் (......)

**24.** கிரேக்க நாடகாசிரியர் ஈஸ்கலசின் முக்கூட்டு நாடகத் தொகுதிக்குள் (Orestia Trilogy) குறிப்பிடப்படும் நாடகங்கள்
(1) ஈடிப்பஸ், ஈடிப்பஸ் அற்கொலனஸ், அன்ரிகனி
(2) பேசியன், சப்ளயன்ராஸ், அகமெம்னன்
(3) அகமெம்னன், செவன் எகெயின்ஸ்ட் தீப்ஸ், அஜக்ஸ்
(4) அகமெம்னன், சோபெரி, யூமெனிற்ஸ்
(5) மெலிற்றஸ், புரொமீடியஸ் பவுண்ட், சோபெரி (......)

More Past Papers at
tamilguru.lk

**25.** வெண்கட்டி வட்டம் (The caucasian chalk circle) எனும் நாடகத்தை எழுதியவர்
(1) அயனஸ்கோ (2) அன்ரன் செக்கோவ் (3) பேட்டோல் பிறெக்ற்
(4) மேயர் கோல்ட் (5) ஆதர் மில்லர் (......)

**26.** சமஸ்கிருத நாடகாசிரியர் பாசர் எழுதிய நாடகங்களில் ஒன்று
(1) ஸ்வப்ன வாசவதத்த (2) விக்கிரமோர்வசிய (3) மிருச்ச கடிக
(4) ரத்னாவலி (5) நாகானந்தம் (......)

**27.** சமஸ்கிருத அரங்கப் பகுதிகளில் ஒன்றான 'நேபத்ய கிருகம்' குறிப்பது
(1) பிரதான மேடையையாகும். (2) பார்ப்போர் கூடத்தையாகும். (3) ஒப்பனை அறையையாகும்.
(4) பிரதான வாயிலையாகும். (5) திரையையாகும். (......)

**28.** மத்திய காலத்தில் தோற்றம் பெற்ற 'குவெம் குவாறிற்றிஸ்' (Quem Quarities) நாடகம் ஒரு,
(1) பொது வணக்கமுறை நாடகமாகும். (2) திருமறை நாடகமாகும்.
(3) புனிதரின் நாடகமாகும். (4) அற்புத நாடகமாகும்.
(5) ஒழுக்கப் பண்பு நாடகமாகும். (......)

**29.** 1564 இல் பிறந்த வில்லியம் சேக்ஸ்பியர் 1616 இல் அதே தினத்தில் மரணித்தார் எனக் கூறப்படுகிறது. அத்திகதி,
(1) ஏப்ரல் 21 ஆகும். (2) ஏப்ரல் 22 ஆகும். (3) ஏப்ரல் 23 ஆகும்.
(4) ஏப்ரல் 24 ஆகும். (5) ஏப்ரல் 25 ஆகும். (......)

**30.** யப்பானிய 'நோ' நாடகங்களில் வரும் பிரதான பாத்திரம் அழைக்கப்படுவது
(1) ஷித்தே என்றாகும். (2) வகி என்றாகும். (3) ஷிந்தோ என்றாகும்.
(4) கொக்கா என்றாகும். (5) ஹக்கம என்றாகும். (......)

**31.** யப்பானிய 'கபுகி' நாடகங்கள் நிகழ்த்தவெனக் கட்டப்பட்ட 'கபுகி' என்ற அரங்கின் அமைவிடம்,
(1) ஒஸ்லோவில் உள்ளது. (2) டொரன்ரோவில் உள்ளது. (3) டோக்கியோவில் உள்ளது.
(4) ஒன்ராறியோவில் உள்ளது. (5) சூரிச்சில் உள்ளது. (......)

**32.** நடிகரைத் தயார்படுத்துவதற்காக குரற்பயிற்சியை அடிப்படையாகக் கொண்டு இடம்பெறும் அரங்க விளையாட்டு
(1) குருட்டு ஆட்டோ (2) ஆடும் வீடும் (3) பழக்கலவை
(4) பொன்முட்டை (5) கோழி கோட்டான் (......)

[பக். 4 ஐப் பார்க்க

**33.** நாடகத்திற்கான விளம்பரம் செய்யப்பட வேண்டியது,
(1) தயாரிப்பாளரால் ஆகும். (2) நெறியாளரால் ஆகும்.
(3) நடிகரால் ஆகும். (4) மேடை முகாமையாளரால் ஆகும்.
(5) நாடகாசிரியரால் ஆகும் (……)

**34.** நடிகர் நீண்ட வசனம் பேசுவதற்கு காற்றைச் சேமித்து வைக்க உதவும் பகுதி,
(1) உச்சந்தலையாகும். (2) நாசியாகும். (3) நெஞ்சு ஆகும்.
(4) தொண்டை ஆகும். (5) அடிவயிறு ஆகும். (……)

**35.** மேடை நாடகத்தின் ஒளி அமைப்பு,
(1) காட்சிகளை அழகாக்கும்.
(2) மேடையை பிரகாசமாக்கும்.
(3) நாடகக் கதை ஓட்டத்தையும் பாத்திர உணர்வையும் புலப்படுத்தும்.
(4) இசையை எடுத்துக்காட்டும்.
(5) நடிகர் முகங்களை எடுத்துக்காட்டும். (……)

More Past Papers at
tamilguru.lk

**36.** மேடை முகாமையாளரின் பணிகளில் ஒன்று,
(1) ஒளி, ஒலியைக் கவனித்தல் (2) ஒப்பனை செய்தல்
(3) காட்சிகளை ஒழுங்குபடுத்தல் (4) வேட உடை அணிதல்
(5) இசையமைத்தல் (……)

**37.** 'அபசுரம்' நாடகத்தில் வரும் பின்வரும் உரையாடலை அவதானித்து வினாவுக்கு விடையளிக்குக.


A : ஆனால் இலாப நட்டம் அதிகமாக வியாபாரத்தில்தான் பார்க்கிறது.

B : ஓம். அது வரவையும் செலவையும் பொறுத்திருக்கு.

C : ஆனால், எனக்கு ஏன் இந்தக் கஷ்டம் வந்தது ?

இங்கு A, B, C எனக் குறிப்பிடப்படும் பாத்திரங்கள் முறையே,
(1) அருளர், தியாகர், சிவாயர் (2) தியாகர், அருளர், பொதுவர்
(3) புரொபசர், சிவாயர், தியாகர் (4) அருளர், தியாகர், பொதுவர்
(5) புரொபசர், தியாகர், அருளர் (……)

**38.** படத்தில் காட்டப்பட்டுள்ளது



(1) இந்திய கூத்தம்பல அரங்காகும்.
(2) சீன ஒப்றோ அரங்காகும்.
(3) யப்பானிய கபுக்கி அரங்காகும்.
(4) மலேசிய மயாங் அரங்காகும்.
(5) இந்தோனேசிய வயாங்குலிற் அரங்காகும். (……)

**39.** படத்தில் காட்டப்பட்டுள்ள வேடமுகம்



(1) யப்பானிய மரபிற்குரியது.
(2) சீன மரபிற்குரியது.
(3) சிங்கள மரபிற்குரியது.
(4) இந்தோனேசிய மரபிற்குரியது.
(5) பாலி மரபிற்குரியது. (……)

**40.** படத்தில் காட்டப்பட்டுள்ள அரங்கக் கலைஞர்



(1) அருட்திரு தனிநாயகம் அடிகளார்.
(2) அருட்திரு மரியசேவியர் அடிகளார்.
(3) அருட்திரு தமிழ்நேசன் அடிகளார்.
(4) அருட்திரு டேமியன் அடிகளார்.
(5) அருட்திரு தியோகுப்பிள்ளை அடிகளார். (……)

* *

[பக். 5 ஐப் பார்க்க

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2015 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2015 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2015

නාට්‍ය හා රංග කලාව II
நாடகமும் அரங்கியலும் II
Drama and Theatre II

58 T II

4373

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :**

※ பிரிவு **A** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் பிரிவு **B** இலிருந்து **இரண்டு** வினாக்களையும் தெரிவுசெய்து, **நான்கு** வினாக்களுக்கு விடை எழுதுக.

### பிரிவு A

**1.** 'அன்ரிகனி' ஒரு கிரேக்க திறஜெடி நாடகமாயினும் அது உலகப் பொதுவான, எக்காலத்திற்கும் பொருந்தக்கூடிய ஒரு கருப்பொருளைக் கொண்டுள்ளது.

(i) திறஜெடி நாடகத்தில் உள்ளடங்கியுள்ள **ஆறு** முக்கிய மூலகங்களும் அன்ரிகனி நாடகத்தில் எவ்வாறு வெளிப்படுகின்றது என்பதை விளக்குக. (06 புள்ளிகள்)

(ii) பாத்திர மோதுகைகள், முரண்நிலைகள் என்பன அன்ரிகனியில் எவ்வாறு வெளிப்பட்டுள்ளன என்பதை விளக்குக. (09 புள்ளிகள்)

**2.** (i) 'யூலியசீசர்' நாடகத்தில் காணப்படும் பிரதான மோதுகை யாது ? (02 புள்ளிகள்)

(ii) இந்நாடகத்தில் வரும் பிரதான பாத்திரங்கள் **ஐந்தைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) யூலியசீசர் நாடகத்தினால் வெளிக்காட்டப்படும் வாழ்க்கைக் கண்ணோட்டத்தை விளக்குக. (04 புள்ளிகள்)

(iv) சீசர் பாத்திரம் உள்ளாகும் அவலத்தின் ஊடாகச் சமூகத்திற்கு ஒரு செய்தி வழங்கப்படுகின்றது என்பதை ஏற்றுக்கொள்வீரா ? விளக்குக. (06 புள்ளிகள்)

**3.** (i) "ஒரு பாவை வீடு நாடகத்தில் நோறா-ரோவால்ட் முரண்பாடு 'குடும்பத்தின் இருப்பு' தொடர்பான ஒரு முரண்பாடாகும்" என்பதை விளக்குக. (07 புள்ளிகள்)

(ii) நாடகத்தில் இடம்பெற்றுள்ள குறியீடுகள் மூலம் வாழ்க்கையின் யதார்த்தம் வெளிப்படும் விதத்தை விளக்குக. (08 புள்ளிகள்)

### பிரிவு B

**4.** (i) இலங்கைத் தமிழ் அரங்கில் பாரம்பரியமாகக் கூத்து பயிலப்படும் பிரதேசங்களைக் குறிப்பிட்டு, அப்பிரதேசங்களில் பயிலப்படும் கூத்துகளைப் பட்டியற்படுத்துக. (05 புள்ளிகள்)

(ii) ஏதேனும் **இரண்டு** பிரதேசக் கூத்துகள் பற்றி விரிவான விளக்கம் தருக. (05 புள்ளிகள்)

(iii) பாரம்பரியக் கூத்துகளைப் பேணிப்பாதுகாத்தல் மற்றும் அடுத்த சந்ததியினருக்கு வழங்குதல் தொடர்பான உமது கருத்துகளை முன்வைக்குக. (05 புள்ளிகள்)

**5.** இலங்கைத் தமிழ் அரங்க வளர்ச்சியில் பின்வரும் அரங்கவியலாளர்களின் பங்களிப்புகளை விளக்குக.

(i) அ. தாசீசியஸ், சுஹைர் ஹமீட் (05 புள்ளிகள்)

(ii) ம. சண்முகலிங்கம், க. சிதம்பரநாதன் (05 புள்ளிகள்)

(iii) க. பாலேந்திரா, நித்தியானந்தன் (05 புள்ளிகள்)

**6.** இலங்கை சிங்கள அரங்கில் பாரம்பரிய மரபுவழி நாடகங்கள் செல்வாக்குச் செலுத்தி நிற்பதைக் காணமுடியும். பின்வரும் அரங்குகள் பற்றி விவரிக்குக.

(i) நாடகம (07 புள்ளிகள்)

(ii) நூர்த்தி (08 புள்ளிகள்)

***

More Past Papers at
tamilguru.lk